


657
N-53
O-5:g
N53
120697

விலை அணா 4.

# பேச்சுக் கலை

ஆசிரியர் :

ஒரு முது சாரணர்.

0-1519
N53

பதிப்பாசிரியர் :

**வித்துவான் பெ. அண்ணாமலை அவர்கள்,**

*தலைமைத் தமிழாசிரியர்,*

அர்ச். கேபிரியல் உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

First Edition Sep. 1953.

0-,5
153

உரிமை பதிப்பாசிரியர்க்கு.

விற்பனை உரிமை :-
சுப்பிரமணிய சுவாமிகள்
அன்னக்காவடி மடம், சன்மார்க்க சங்கம்,
உளுந்தூர்ப்பேட்டை, S. A. Dt.

120697

# முன்னுரை

அயல் நாடுகளில் சங்கங்கள், பெருங் கூட்டங்கள் ஆகிய பொது இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காகச் சாரணர்களை அழைக்கிறார்கள். காரணம் சாரணர்கள் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஆராய்ந்து நடைமுறையில் கொண்டு வருகின்றவர்கள் என்பதை மக்கள் நம்புவதேயாகும். "**கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக**" என்ற குறட்பாவுக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டியவர்கள் சாரணர்கள் அல்லவா? சாரண இயக்கத்தில் உள்ள பயிற்சிகள் அனைத்தையும் ஒரு முறையாவது அறிந்தால் கல்வித் திட்டங்களில் இன்று புகுத்தப்பட்டுள்ள செஞ்சிலுவைப் பயிற்சி, குடிமைப் பயிற்சி போன்ற புறப்பாடப் பயிற்சிகளுக்கு இடமில்லை என்பதை அறியலாம். இவ்வுண்மையை அறிந்தவர்கள் சிலரே. அவர்களுக்கும் வாய்ப்புக் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இக்காலத்து மாறுதல் பெற்றுள்ள ஆரம்பக்கல்வித் திட்டத்தில், சாரணப் பயிற்சிகளுள் முதல் படியாகிய, இளம் சாரணப் பயிற்சியைக் கைக்கொண்டால், இப் புதிய கல்வித்திட்டத்தின் நோக்கம் பூரண வெற்றியடையும் என்பதைத் தெளியலாம்.

நம்முடைய குடியரசு நாட்டில் மக்கள் ஒவ்வொருவரும் சொற்பொழிவு ஆற்றும் திறமை பெற்றிருக்க வேண்டுமென்பது அனைவருக்கும் உடன்பாடாகும் உண்மையே. வாயில்லாப் பிராணிகளாக மக்கள் சமூகம் வாழ முடியாது. உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளிய வெளியிடும் ஆற்றல் படைத்தில்லாதவன் கொண்டுள்ள அருங் கருத்துக்கள் அனைத்தும் குடத்துள் வைத்த விளக்குபோல் பயனற்றுப் போகும். எனவே, ஒவ்வொருவரும் பேசப் பழகுதல் வேண்டும் என்ற விருப்பம் கொள்வது இயல்பு. இச்சிறு

நூலில் சொற்பொழிவு தயாரிக்கும் முறை, பண்புகள், பேச்சிலக்கணங்கள் இன்ன பிறவற்றைச் சில எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளேன். எழுதிப்படித்தல், பேசுதல், சொற்போர் (தர்க்கம்) புரிதல், ஒலிபெருக்கி, வானொலி இவைகளில் பேசுதல் எவ்வாறு என்பதையும், எப்படிப் பழகுதல் என்பதையும் விளக்கியுள்ளேன். குறிப்புத் தயாரிக்கும் முறையை உதாரணங்கள் தந்து விளக்கியுள்ளேன். இந்நூல் கல்லூரி - உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கும், சாரணர்கட்கும் மிகப் பயன்படும். இந்நூலை விற்று அதனால் வரும் வருவாய் அனைத்தும் உளுந்தூர்ப்பேட்டையிலுள்ள "அன்னக் காவடி மடத்தில்" பகலில் பசித்து வருவோர்க்குக் கூழிடும் அறத்திற்குச் செலவிடப்படும். ஆகவே, இப்புத்தகம் ஒன்றை வாங்கியவரும் இரண்டொருவருக்கு உணவிட்டாராவார்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்."

வணக்கம்,

அன்பன், முது சாரணன்.

# பேச்சுக் கலை

## 1. தோற்றுவாய்

பொதுக்கூட்டத்தில், பலர் அல்லது சிலர்முன், மேடைமேல் நின்று பேசுவது ஒரு கலை. ஆசையும் பழக்கமும் ஒருவரை நல்ல பேச்சாளராக்கும். நாடகத்தில் நடிக்கும் திறமை பெற்றவர்கள் எளிதில் சொல்வன்மையிலும் திறமை பெறுதல் கூடும். சிறந்த சொல்வன்மை பெறுவதற்கு விருப்பமுடையவர்கள் அக்கலையைப்பற்றிய சில வழிமுறைகளைத் தெரிந்திருத்தல் நல்லது. "நாநலம் என்னும் நலன் உடைமை; அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று," என்பது பொய்யாமொழி. உலக அரசியல், சமூகவியல் ஆகியவற்றில் முதலிடம் வகித்த—வகிக்கும் அனைவரும் சொல்லின் செல்வர்களே. வில்லம்பில் சொல்லம்பு வீறுடைத்து என்பதை நாம் மறக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

அரசியலில் ஈடுபடுவோர்கள், ஆட்சியில் அங்கம் வகிப்பவர்கள், சட்டசபைகளில் சர்ச்சை யிடுபவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் ஆகிய இன்ன பிறரும் பேச்சாளர்களே. தத்தம் தொழிலுக்கேற்ப இவர்கள் தம் பேச்சுத் திறமையை விருத்தி செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சொல்வன்மை உடையவர்கள் எத்தொழிலிலும் மேன்மை அடைவார்கள். அவர்கள் சொற்படி உலகத்தவரும் நடப்பர். "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்," என்னும் தமிழ்மறை வாக்கு பொய்யாகுமா? நன்கு கற்றவர்களுக்குச் சொல்வன்மையும் இருக்குமேயானால், அந்நிலை பொன்மலர் நறுமணம் பெற்றதே போலாகும்.

இக்காலத்தில் மேடைப் பேச்சுக்கள் மிகச் சிறந்த சாதனமாகக் கருதப்படுகின்றன. எத்துறையில் ஈடு

படுவோருக்கும் பேசும் திறமை இன்றியமையாத தாய்விட்டது. தம் கருத்துக்களைப் பிறர் மனத்தில் பதியுமாறு பேசுகின்ற வல்லமையை விருத்தி செய்து கொண்டிருக்க வேண்டும். எண்ணங்களை விளக்க மாகவும், தெளிவாகவும், நயம்படவும் சொல்லும் திறமை பெற்றுள்ளவர்கள் எவ்வியக்கத்திலிருப்பினும் தலைமை வகிப்பது திண்ணம். சேர்ந்து நினைக்கவும், புதுப்புது எண்ணங்களைப் பரப்பவும், கருத்துக்களை அலசிப்பார்த்து முடிவுக்கு வரவும் ஏதுவாக உள்ளவை பொதுச் சொற்பொழிவுகள். கருத்தை அறிவிப்பது, உரிமையைக் காப்பது ஆகியவை குடியரசு ஆட்சியில் உள்ள ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்பும் ஆகும். எனவே, ஒவ்வொருவரும் தமக்கு ஏற்படும் வாய்ப்பை நழுவவிடாமல் இருக்கவேண்டுமாயின் பேசும் திறமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### ஏன் பேசுகின்றோம்?

இதுவும் ஒரு கேள்வியே! நம் எண்ணங்கள், உணர்வுகள், உண்மைகள், துணிவுகள் ஆகியவற்றை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்குச் சாதகமாக உள்ளது பேச்சு. சொற்கள் தனித்தனியாக உள்ளவை. அவை மனத்திலும் அவ்வாறே உதிக்கின்றன. அவைகளை ஒழுங்காகச் சொற்றொடராக்கிப் பேசுவதுதான் பேச்சு. இவ்விதம் சொற்களைப் பதப்படுத்திப் பேசுவதால் சொற்றொடரின் பொருளையும் பயனையும் முன்னிற்போர் கேட்டறிந்து அனுபவிக்கின்றனர். எனவே, எழுதுவதற்குமுன் பேசுகின்றோம் என்பதாலும், எழுதுவதைவிடப் பேசுவது அதிகமாயிருப்பதாலும் பேசுவது அவசிய மாகின்றது.

### சொல்லாடல்

ஒருவருக்குமுன் நின்றுகொண்டு பேசுவது சொல்லாடல். நம் கருத்தை அல்லது பிற விஷயத்

தைப்பற்றிச் சொல்லுதலும், முன்னிற்போர் அதற்குப் பதில் கூறுதலும் சொல்லாடலில் அடங்கும். ஆனால், பலர்முன் நின்றுகொண்டு தம் கருத்துக்களைப் பேசுதல் வேறு நிலை. இந்நிலையில் முன்னிருப்போர் எவரும் குறுக்கிட்டுக் கூறுவதில்லை. எவரும் குறுக்கிடாத நிலைமையில் பேசி முடிப்பதே சொற்பொழிவாகும்.

## 2. சொற்பொழிவு

பேசுவதென்றால் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். தம் எண்ணத்தை அல்லது கொள்கையைப் பிறருக்கு அறிவுறுத்த வேண்டுமென்றும்—சபையில் நகைச்சுவையை உண்டாக்க வேண்டுமென்றும்—சபையோரை ஒரு வழிக்குத் தூண்ட வேண்டுமென்றும்—தம் வழிக்கு அவர்களை உடன்படச் செய்ய வேண்டுமென்றும் பேச்சாளர்கள் விரும்புகின்றார்கள். மேற்குறித்த குறிக்கோள்களுள்—நோக்கங்களுள் தம் கருத்தில் ஒன்றிரண்டு உச்சநிலை பெற்றிருக்கும். பேசுவதற்குமுன் மூன்று விஷயங்களைச் சிந்தித்து மனத்தில் கொள்ள வேண்டும். அவை முறையே பேசும் பொருள், பேசவேண்டிய காரணம், கேட்போர் தகுதி ஆகியவையாம். இம்மூன்று விஷயங்களையும் பேச்சைத் தயாரிக்கும்போதும், பேசும்போதும் பேச்சாளர்கள் மறத்தல் கூடா.

ஒருவர்முன் ஒருவர் நின்று அல்லது ஒருவருடன் மற்றொருவர் பேசுவது சொல்லாடல் என்று அறிந்தோம். பலர்முன் நின்று பொதுவாக ஒரு பொருளைப் பற்றி ஒருவரே பேசுவது சொற்பொழிவு ஆகும். கலாசாலைகளில் மாணவர்கள்முன் பேசுவது போதனை அல்லது கற்பித்தல் ஆகும். யந்திரங்களின் முன் நின்று பேசுவது வானொலிப் பேச்சாகும். சிலர் சேர்ந்து ஒரு பொருளைக் குறித்து ஆராயும் வகையில்

பேசுவது தர்க்கப் பேச்சாகும். இவைபோன்று பலவகைப் பேச்சுக்கள் இருக்கின்றன. இவைகளனைத்தும் சொற்பொழிவின் சாயல்களே. ஒருவருடன் முன்னின்று பேசும்போது அவர்தம் முகத்தைக் கவனித்துக்கொண்டு பேசவேண்டும். பேசும் பொருள் கேட்போர் மனத்தில் பதிய வேண்டுமானல் மெல்லிய குரலில் நிதானமாகப் பேசவேண்டும். முன்னிற் போரைக் கேள்வி கேட்க விடுவதைவிட அவர்கள் கேட்கக் கருதும் கேள்விகள் இன்னதென்பதை முன்கூட்டியே உணர்ந்து விடையைச் சொல்லாட லுக்குள்ளேயே அமையப் பேசுதல் சிறந்ததாகும். நமக்குத் தெரிந்த விடைகளுக்குரிய கேள்விகளை முன்னின்று கேட்போர் உள்ளத்திலே எழவைத்து விடை பகர்வதால் சம்பாஷணையில் நமக்கு வெற்றி உண்டாகும். கேட்போர் நம் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்கும் வழியாகும். "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை, வெல்லும்சொல் இன்மை அறிந்து," என்ற குறட்பாவும் மேற்சொன்ன கருத்துக்களை வலியுறுத்துகின்றது அன்றோ?

வாழ்க்கை நடப்பில் நாம் எப்பொழுதும் பேச வேண்டியிருக்கிறது. ஆகையினல், ஒவ்வொரு சொல்லையும் திருத்தமாக உச்சரிக்கப் பழகவேண்டும். இந்த நிலை சரிப்பட வேண்டியே சிலர் எழுதிப் படித்து விடுகிருர்கள். எழுதிப் படித்தால் சபையோரைப் பார்த்துப் பேசமுடியாது. எழுதிப் படிப்பதில் பேச்சு ஓட்டம் கட்டுப்படுகிறது. ஆனல், விஷயம் ஒழுங்காக இருக்கலாம். சிலர் மனனம்—நெட்டுருச் செய்து பேசுவதும் உண்டு. இவ்விதப் பேச்சு, கண்களையும் கைகளையும் எதேச்சையாக்கி, பேச்சு வேகத்தை ஓரளவு கட்டுப்படுத்துகிறது. இவ்வாறு பேசுகையில், ஒன்றிரண்டு சொற்களை மறந்துவிட்டால் பேச்சு நின்றுவிடும்; கேட்போர் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டு எள்ளி நகையாடு

வர். எனவே, எதேச்சையாக — இயற்கையாகப் பேசுவதே நல்ல முறை. பேசுவதற்குமுன் பல முறை எண்ணியெண்ணி குறித்துக் கொள்ளல் வேண்டும். பேசுகையில் தகுந்த சொற்கள் ஞாபகத்திற்கு வாராவிடில் பேச்சு சிறிது தடையுறலாம். இந்தத் தடை சொற்பொழிவின் அழகைக் கெடுத்து விடாது. எதேச்சையான பேச்சு இயல்பானதாகவும் இடம், பொருள், ஏவல்களுக்கேற்ப சரிப்படுத்திக் கொள்வதாகவும் அமைந்துவிடும்.

## அ. தர்க்கம்

தர்க்கப் பேச்சில் திறமையின் நுணுக்கம்தான் கட்சிக்கு வெற்றியை யுண்டாக்கும். நம் நாட்டில் தர்க்கமிடும் இயல்பு வளர்ச்சியுறும் காலம் இது. கழகங்கள், குழாங்கள், நகராண்மைக் கழகங்கள், சட்டசபைகள், நீதிமன்றங்கள் ஆகியவைகள் தர்க்கமிடும் இடங்களே. அறிவுத் திறமையும், நாவன்மையும் மிக்கவர்கள் தர்க்கசபையில் தம் கட்சியின் மதிப்பைப் பெறுவார்கள். தர்க்கத்தைத் தொடங்குவது எப்படி? நடத்துவது எப்படி? முடிப்பது எப்படி? என்பனவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும். தர்க்கமிடுவோர் அனைவரும் ஒருவரை மற்றொருவர் நோக்கிப் பேசும் முறையில் ஆசனங்கள் அமைக்கப்பட வேண்டும். வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ சபை அமைந்திருத்தல் நல்லது. தர்க்க சபையில் நகைச்சுவை, பொதுக் கருத்துக்கள், பயன் தரும் மாற்றங்கள், மறுத்தல், உடன்படல், இன்ன பிற யுக்திகள் அனுபவிக்கப்படவேண்டும். "இன்னது அல்லது இதுவென மொழிதல்; பிறநூல் முடிந்தது தானுடன் படுதல்," என்பன **நன்னூல்** கூறும் உத்திகள் (**யுக்திகள்**). ஒன்றை மறுக்க வேண்டுமாயின், "நான் அதை மறுக்கிறேன்" என்று ஆரம்பிக்காமல் "மறுக்க வேண்டுமே என்று வருந்துகின்றேன்" என்று நயம் படப் பேசி மறுக்கத் தொடங்கினல் சபையோருடைய

மனத்தில் மறுப்பு நேராகப் பதியும். பேசுகையில் கேட்போர் மனத்தில் அருவை, வெறுப்பு முதலிய தீப்பண்புகள் தோன்ருதபடி இன்சொற்களையே கையாள வேண்டும். "கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாம் சொல்," என்னும் வள்ளுவர் வாக்கின்படி பகைவரும் விரும்பும்படி யாகப் பேசுவதே சிறந்த பண்பாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், நவின்ருேர்க்கு இனிமை தரும் நன்மொழி புணர்த்தல் வேண்டும்.

தர்க்கத்தைத் தொடங்குவோர் தர்க்க விஷயத்தை முன்கூட்டியே ஆராய்ந்திருக்க வேண்டும். முதலில் சில கருத்துக்களைக் கூறி, இரண்டொரு கேள்விகளையும் விடுத்துவிட்டுத் தொடங்க வேண்டும். சபையோர் ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். தர்க்கத்தைத் தொடங்குபவரே பேச்சை நீட்டிப்பது தவருகும். அதிக நேரம் பேசுவோர் சில சமயம் தர்க்க விஷயத்தை விடுத்து வேறு விஷயத்தில் செல்லவும் கூடும். அச்சமயத்தில் நினைப்பூட்டித் தர்க்க விஷயத்தில் மனத்தைச் செலுத்தும்படிச் செய்யவேண்டும். அவ்வப்போது இடை இடையே தர்க்கத்தை நிறுத்தி, விஷயத்தை எந்த அளவுக்கு ஆராய்ந்துள்ளோம் என்பதை அலசிப் பார்த்த பின்னர், மீண்டும் தொடங்குவது நல்ல முறையாகும். இவ்விதம் செய்வதால் தர்க்கத்தின்போது சிலருக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பும் தணியும். தர்க்கமிடும் கட்சியினர் உடன்பட்ட விஷயங்களையும், மாறுபட்ட விஷயங்களையும் தர்க்கத் தலைவர் அடிக்கடி எடுத்துக் கூறுவதும் சிறந்த முறையாகும்.

தர்க்கத் தலைவர் தம் கருத்தையோ, அல்லது தீர்ப்பையோ அவசியமான போதோ அல்லது முடிவிலேயோ கூறுகிருர். தர்க்கமிடுவோர் ஒருவரை

ஒருவர் நோக்கிப் பேசுவதோடு தலைவரையும் நோக்கிப் பேசவேண்டும். தலைவர் தர்க்க காலத்தில் நேர் பங்கு எடுத்துக் கொள்ளாமல் பாராளும் மன்ற (சட்டசபை) முறையைப் பின்பற்றி நடத்தல் தர்க்க நடத்தையில் வெற்றிக்குத் துணை செய்வதாகும்.

## ஆ. எழுதிப்படித்தல்

எழுதிப்படிப்பதும் ஒருவித சொற்பொழிவே. இக்காலத்தும் இவ்வழக்கம் இருந்துவருகின்றது. முன்பின் பார்க்காத பத்திரத்தை (எழுத்தோலையை) சபைமுன் படிக்க நேரிடலாம். இவ்வகை ஏற்பாட்டில் சிலருக்கே பழக்க மிருக்கும். படிப்பது எளிது; ஆயினும் சில உபாயங்களைப் பின்பற்ற வேண்டும். நீட்டோலையைப் பார்த்துப் படிக்கும்போது புதுச்சொற்கள் இருக்க நேரும். உரத்த குரலோடு வேகமாகப் படித்தால் புதுச்சொற்களைக் கவனித்துக் கொள்ளத் தவறிவிடுவோம். நிதானமாகப் படிக்கவேண்டும். படிக்கும்போதே இனிப் படிக்கவேண்டிய சொற்களைக் கவனிக்கும்படி கண்களைப் பழக்க வேண்டும், அவ்வப்போது நிறுத்தித் தொடங்குதல் நன்றாய்ப் படிப்பதற்கு உதவியாகும். பிறர் எழுதினதைப் படிக்கும்போதும் மேற்சொன்ன இடையூறு உண்டாகும். ஆனால், அவ்விடையூறையும் மேற் சொன்ன உபாயத்தையே கடைப்பிடித்துச் சரிப்படுத்திக் கொள்ளலாம்.

நாமே எழுதி நாமே படித்தல் எளிதுதான். இம்முறையால் பேசும் திறமை வளர்ச்சியுறும். படிப்பதை நாம் உணர்ந்து-கேட்போரை அறிந்து படிக்க வேண்டும். படிக்கும்போது நமக்கு நன்றாய் விளங்கினால் கேட்போருக்கும் நன்றாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே, எழுதிப் படிப்பதை

இயல்பாகப் பேசும் சொற்பொழிவுக்குரிய முதல் ஒத்திகையாகக் கொள்ளலாம்.

இ. ஒலிபெருக்கிப் பேச்சு

ஒலிபெருக்கியின் முன் பேசும்போது நாம் பலரைக் காணவும் பலர் நம்மைக் காணவும் நேருகிறது. ஒலி பெருக்கியில் பேசும்போது நம் குரலொலியைக் குறைத்துக் கொண்டு பேசுவது தான் நல்லது. பல்லாயிரம்பேர் கொண்ட கூட்டத்தைக் கண்ட அளவிலே உரக்கப் பேசவேண்டுமென்று எண்ணி அவ்வாறு பேசினல் பேச்சு தெளிவாகவும் இனிமையாகவும் இருக்காமல் கலங்கிவிடும். ஒலி பெருக்கியின் மிக அருகே நில்லாது சற்று விலகி நிற்றல் வேண்டும். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கும் பேரவையில் இந்தக் கருவியின் உதவியால் அனைவருக்கும் கேட்குமாறு பேசுகின்ருேம். ஒருவன் முன்னின்று பேசினல் எந்நிலையில் பேசுவோமோ அந்நிலையிலேயே இக்கருவியின் முன்னும் பேசவேண்டும். உரத்த குரலில் பேசினல் ஒலி பெருக்கி மிகக்கலங்கி ஒலியைக் குழப்பிவிடும்.

ஈ. வானெலிப் பேச்சு

ரேடியோ அல்லது வானொலிப் பேச்சுக்கு எதிர்காலம் மிக்கு இருக்கிறது. சொற்பொழிவுகள்பல ரேடியோவில் நிகழ்த்தப்படுகின்றன. பல இடங்களில் பரவி இருக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில் பேசுவதற்குள்ள சாதனம் ரேடியோவே. ரேடியோவில் பேசுபவரை வெளியார் பார்க்க முடியாது. பேசுவோரும் மக்களைப் பார்த்துப் பேசமுடியாது. ஆனல், பேசுவதை எவ்விடத்திலிருந்தும் எத்துணை தூரத்திலிருந்தும் எப்படியிருந்தும் யாவரும் கேட்கலாம். இதுவே மேடைப் பேச்சுக்கும் ரேடியோ பேச்சுக்கும் உள்ள வேறுபாடு. ரேடியோவில் பேசுவோருக்கு முக, உடல், ஆட்ட

அசைவுகள் அவசியமில்லை. கேட்போரை வசப் படுத்தக் குரல் ஒன்றையே பயன்படுத்த வேண்டும். ஆகவே இந்தப் பேச்சுக்கள் பெரும்பாலும் எழுதியே படிக்கப் படுகின்றன. படிப்பதற்கு முன் பழகு கிறார்கள்; குரலை உயர்த்துவதும் தாழ்த்துவதும் போன்ற பயிற்சிகளைச்செய்து சரிப்படுத்துகிறார்கள்; குறித்த நேரத்தில் முடிக்கவும் முற்படுகிறார்கள்.

ரேடியோ மூலம் பேசுவதைக் கேட்கின்றவர்கள் ஒரு தரத்தவரல்லர். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், பண்டிதர், பாமரர் இன்ன பிறராவர். இதனால் நம் பேச்சு மிக இலக்கணமாய், பரியாயச் சொற்கள் நிறைந்ததாயிராமல் கேட்போரை நகைச் சுவையில் ஈடுபடுத்தி, எளிய கண்ணியமான முறையில் குரலைச் சமயத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு பேசுவது மிக நல்லது. ரேடியோவின் முன் காகிதத் தைப் புரட்டுவது-மூச்சுவிடுவது போன்ற சிறு அரவ மும் செய்தல் கூடாது. ஏனெனில் அச்சிறு சத்தமும் வெளிப்பட்டுவிடும். நம் எண்ணம் ரேடியோவின் மைக்கிரோ போனில இருக்க வேண்டும்; குரலை அதன் நிலைக்குச் சரிப்படுத்த வேண்டும்; கண்ட்ரோல் அறையில் நாம் அடிக்கடிப் பார்வையைச் செலுத்திக் கண்ட்ரோலர் செய்யும் குறிப்பு அல்லது சைகை யின்படி நடக்க வேண்டும். நம்முடைய பேச்சுவேகம் —குரலெடுப்பு—மைக்முன் அமரும் நிலை ஆகிய வற்றை அவர் ஒழுங்கு படுத்துகிறார். ரேடியோ கிராம சீரமைப்புக்கும், மக்களைத் தட்டியெழுப்புவ தற்கும் உபயோகப்படும் முக்கிய சாதனமாகும்.

## உ. பிரசங்கமும் காலக்ஷேபமும்

புராண இதிகாசக் கதைகளைப் பொதுக் கூட்டங் களில் பிரசங்கம் செய்வதும் ஒருவகை சொற் பொழிவேயாகும். பிரசங்கம் செய்யும்போது ஒருவர் கையேடு வாசிப்பார்; செய்யுட்களை இசையுடன்

பாடி நிறுத்துவார். பிரசங்கியார் அப்பாடல்களுக்கு வியாக்கியானம் செய்து இடையிடையே கிளைக் கதைகள் கூறிச் சபையோரை மகிழ்ச்சியுறச் செய்வார். பிரசங்கம் செய்யப் பழகுவதால் கட்டுக்குட்பட்ட சொற்பொழிவு செய்யும் திறமையைப் பெறலாம். இராமாயணம், பாரதம், பெரிய புராணம் போன்ற நூல்கள் பிரசங்கத்திற்கு ஏற்றவைகளாகும்.

கதா காலக்ஷேபம் பேச்சுடன் கூடிய இசையரங்காகும். புராண இதிகாசக் கதைகளைக் கீர்த்தனைகளில் அமைத்துப் பக்க வாத்தியங்களுடனும் அபிநயத்துடனும் ஆடிப், பாடிப், பேசி நிகழ்த்துவதாகும். பரம பாமரர்களும் கதையைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் முழங்குவது காலக்ஷேபத்தில் தான். இம்முறை ஒருவரைக் கட்டுக்குட்படுத்தி எண்ணத்தினைச் சிதற அடிக்காமல் காக்கின்றது. இதில் ஒருவரே பல பாத்திரங்களாக நடிக்கவும் பழக வேண்டியிருக்கிறது.

## 3. சொற்பொழிவு தயாரித்தல்

பேசுவதற்கு முன் தயாரித்தல் கடினம்; ஆனல், தயாரித்த பின் பேசுவது சுலபம். சொற்பொழிவைத் தயாரிக்கத் தொடங்கும்போது மனத்தில் பல குழப்பங்கள் உண்டாகும். பேசும் நோக்கம் கேட்போர் இயல்பு நம் எண்ணங்கள் ஆகியவற்றை முதலில் சிந்திக்க வேண்டும். எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி நாம் பேசத் தகுந்தவரா? சிறிதாவது பேச இயலுமா? சில புதிய கருத்துக்களையாவது தெரிவிக்க வல்லோமா? என்பன போன்ற கேள்விகளை நாமே கேட்டுக் கொள்ளவேண்டும். நம் அறிவு நிலைக்கு எட்டாத பொருளைக் குறித்துப் பேசப் புகுவதால் தான் சபை நடுக்கம் ஏற்படுகின்றது; சபையோருக்கும் நம்பால் வெறுப்பு உண்டாகின்றது.

120691

எடுத்துக்கொள்ளும் விஷயத்தின் பெயரமைப்பிலும் கூட நம் திறமையைக் காட்டலாம். பெயரைக் கேட்டதும் தவருமல் கூட்டத்துக்குப் போகவேண்டுமென்ற வேட்கை எழும்படி பெயர் அமையவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பித்து, குறிப்பிட்ட காலத்தில் பேசி முடிக்கவேண்டும். "சாரண இயக்கம்" என்பது பற்றிப் பேச எடுத்துக்கொள்வதாக வைத்துக் கொள்ளுவோம். இவ்விஷயம் முழுவதையும் ஒரு மணி நேரத்தில் பேசிமுடிப்பது இயலாது. ஆனல் சாரணீயத்தின் ஓர் அங்கமாகிய நடைப் பிரயாணம் (Hiking) என்பதைப் பற்றிக் குறிப்பாகப் பேசிக்கொண்டு ஆங்காங்கு இவ்விஷயம் சாரணீயத்துடன் தொடர்பாகும் வகையை எடுத்துக் காட்டலாம். நமது நோக்கத்தின்படி விஷயத்தை எடுத்துக் கூறலாம். பொழுது போக்கிற்காகப் பேசுவதாயின் நடைப் பிரயாணத்தில் அநுபவிக்கப்படும் நகைச்சுவை, விந்தை ஆகியவற்றை விவரிக்கலாம். கிராமத் தொண்டைப்பற்றி அறிவிக்கும் முறையில் பேச வேண்டுமானல் தொண்டைப் பற்றிய ஏற்பாடுகள், அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வழிகள், முன் இத்தொண்டில் ஈடுபட்டவர்களின் அனுபவங்கள் ஆகியவற்றைப் பற்றி விவரமாகப் புள்ளிக் குறிப்புகளுடன் பேசவேண்டும். குடிமைப்பயிற்சியின் (Citizenship Training) நன்மையை மக்களுக்கு உணர்த்த வேண்டுமென்பது நோக்கமாயின், அப்பயிற்சி என்றுல் என்ன? எப்படி நடைபெறுகிறது? அன்றுடவாழ்க்கையில் அப்பயிற்சியால் ஏற்படும் மாறுதல்—அதன் அவசியம் ஆகியவற்றைப் பற்றி விளக்கிவிடலாம். உதாரணமாக ஜாடைக்கலை, தடக்கலை (Tracking) நடைப் பிரயாணம் (Hiking) போன்றவற்றைப்பற்றி ஒரு விரிவான சொற்பொழிவு செய்யலாம். இந்தக் குடிமைப் பயிற்சியால் கல்வி நிலை எவ்வாறு வளப்பமடைகிறது என்பதை

யும், சிறுவர்களின் உளம், உடல் இவைகட்கு உண்டாகும் பயிற்சியையும் அனுபவத்தின் மூலம் எடுத்துக்காட்டி விளக்க வேண்டும். குடிமைப்பயிற்சியில் பொதுமக்களும் பிரியம் காட்டுவது அவசியம் என்பதைச் சில எடுத்துக்காட்டுகளால் வற்புறுத்தலாம். சாரணப் பயிற்சிகளுள் தடம் அறிதலும் ஒன்று என்பதைக் கூறுவோமானால், சாரணப்பயிற்சி வாழ்க்கைக்குரிய கலைகளனைத்தையும் தன்னுட் கொண்டிருக்கும் பெருங்கலைக் களஞ்சியம் என்பது மக்கட்குப் புலனாகும்.

பேசுவதற்கு முன் நம்நிலை — சபைநிலை ஆகியவற்றை மனக்கண் முன் வைத்துக் கொண்டு எடுத்துக் கொண்ட விஷயத்தைத் தயாரிக்க வேண்டும். பேசும் விஷயத்தின் தலைப்பை அல்லது பெயரைப் பேசத் தொடங்குவதற்கு முன்கூட தகுந்த காரணங்களைக் காட்டி மாற்றிக்கொள்ளலாம். விஷயத்தைத் தயாரிக்கும் போது ஏற்படும் மாறுதல்களை, தோன்றும் எண்ணங்களை அசட்டை செய்தல் கூடாது. உதாரணமாகத் தடம் அறிதல் என்னும் தலைப்பைக் குறித்துச் சிறுகுறிப்பு தயாரிக்கும் முறையைக் கவனிப்போம் :—

### தடம் (வழி) அறிதல்

**என்ன ?**

1. சாரணப் பயிற்சிகளுள் ஒன்று.
2. குடிமைப் பயிற்சிகளுள் ஒன்று.

**நோக்கம்**

1. வழியறிதலும் ஜாடைகளும்.
2. தன்னம்பிக்கையும் உடனுதவியும்.
3. எச்சரிக்கையும் சுறுசுறுப்பும்.
4. இயற்கை வாழ்வும் செயற்கை வாழ்வும்.
5. பொழுது போக்குக்கான காரியம்.
6. ஒழுக்கப் பயிற்சியும் உயர்வும்.

இவ்விதம் முதன் முதலில் குறித்துக் கொள்ளுகின்றோம். பிறகு ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் சிந்தித்துச் சபைக்கு ஏற்ற விஷயங்களை மட்டும் குறித்துக் கொள்ளவேண்டும். இவ்விஷயமாகச் சிலரைக் கலந்து ஆலோசிக்கலாம்; இது சம்பந்தமான சில புத்தகங்களைப் படிக்கலாம்; கட்டுரைகளையும் படிக்கலாம். இவ்வாறு செய்வதால் பேசுவதற்கான அரிய விஷயங்கள் சில கிடைக்கும். அவைகளையும் குறித்துக் கொள்ளல் வேண்டும். இரண்டாவது தயாரிப்பு முதல் தயாரிப்பின் உருவத்தை மாற்றும்; விஷயங்களைக் கோவைப்படுத்தும்; மேலும் பல கருத்துக்களைத் தோற்றுவிக்கும். உதாரணங்கள் மேற்கோள்கள் இவைகளையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். ஏனென்றால், இவைகள் பேசும்போது மறந்து விடக்கூடும் அல்லவா?

1. குடிமைப் பயிற்சி—இது சாரணக்கலையின் நோக்கம்.
   (அ) சுகமான—உபயோகமான—சந்தோஷமான மக்கள்.
   (ஆ) மனம்—கை—கால்—கண் முதலிய அவயவங்களைப் பழக்குதல்.
2. தடமறிதல்:—பயிற்சிபெற ஏதுவாகிறது.
   (அ) கண்—மனம்—அறிவு—உடல் திறம்பட பழகுதல்:—ஜாடைகள் பயிற்றுவித்தல்.
   (ஆ) திறமைப் பயிற்சி:—நடை—வழியறிதல்—அக்கம்பக்க ஆராய்ச்சி—இயற்கைக் கலையில் தெளிவு-உண்மைகளை உணர்தல்.
3. மகிழ்ச்சிக்கு :—
   (அ) என்றும் மறவாத நிகழ்ச்சிகள்.
   (ஆ) சுகத்துக்குத் துணையாகும் பயிற்சிகள்

(இ) இயற்கை அனுபவம்—விந்தைகள்.

4. மனப்பயிற்சி—உபகாரம்.

(அ) தன்னம்பிக்கை—மனத்தெளிவு.

(ஆ) ஆயத்தமாக இருக்கும் நிலை—முயற்சி —பொறுமை கவனித்தல்.

(இ) தற்காப்பும் பிறர்க்கு உதவியும்.

இவ்வாறு மேலும் மேலும் சிந்தனை செய்து குறிப்புகளைக் கோவைப்படுத்திக்கொண்டு பேச்சைத் தயாரிக்க வேண்டும். சொற்பொழிவின் தொடக்கத்தில் எடுத்துக்கொண்ட விஷயத்தை அறிமுகப் படுத்துவதுடன் நோக்கத்தையும் தெரிவிக்க வேண்டும். சொற்பொழிவின் முடிவில் பேசின விஷயங்களைச் சுருக்கமாகத் திரட்டிச் சொல்லி முடிக்க வேண்டும். தொடங்குமுன் விஷயத்தையும் நோக்கத்தையும் அறிவிப்பதால் சொற்பொழிவு முடியும் வரையில் இருக்க வேண்டுமென்ற எண்ணம் கேட்போருக்கு உண்டாகும். இல்லையேல் இவர் பேச்சில் தலையுமில்லை, வாலுமில்லை என்ற எண்ணத்தோடு சபையோர் போய்விட நேரிடும். உண்மை நிகழ்ச்சிகள்—நகைச்சுவை—கதை போன்ற இடைச் செருகல்கள் இருந்தால் கேட்பவர்களுக்கு மனக் கிளர்ச்சி மேலிடும். விஷயத்திற்குப் பொருத்தமான உதாரணங்களை எடுத்துக் கூறலாம். தடமறிதலைப் பற்றிப் பேசும்போது நிகழ்ந்த சம்பவங்கள் அனுபவங்கள் இயற்கைச் சுகவழிகள் சூரியன்—காற்று மழை—இவற்றை எல்லாம் சுட்டிக் காட்டலாம். நல்ல உதாரணம் ஒன்றாவது இருத்தல் வேண்டும். கணக்குப் புள்ளி விவரங்களும் சில விஷயங்களுக்கு அவசியமாகும். அப்போது முழு எண்களையே கையாளல் வேண்டும். பின்னம், தசாம்ச பின்னம் இவைகளைச் சொல்லிக் கேட்போர் உள்ளத்தைத் தளரச்செய்தல் பேச்சாளரின் திறமைக் குறைவைக் காட்டும். வாக்கி

யங்கள் சிறியவைகளாகவும் எளியவைகளாகவும் அனைவரும் புரிந்து கொள்ளும்படியாகவும் இருக்க வேண்டும். பொருள் விளங்காத அருஞ்சொற்களால் பேசிச் சபையோரை வருத்திஞல் அவர்கள் கேட்ப தற்குப் பதிலாகத் தூங்கித் தொடங்கிவிடுவார்கள். நம் கருத்துக்கு மாறுபட்டோரும் மகிழும்படிப் பேச்சைத் தயாரித்துக் கொண்டு திறமையுடன் பேசினல் அதுவே வெற்றிப் பேச்சாகும்.

பேசுவோர் எவ்வாறு பேசுகிறுர்களோ அதைப் பொருத்தே கேட்போரின் விருப்பும் வெறுப்பும் அமையும். பேசுவோரின் சாயல், பேசும் நிலை, பார்வை, அசைவு ஆகியவைகளும் கேட்போர் கவனத்தை இழுக்கின்றன. ஒவ்வொருவரிடமும் சில குறைகள் இருக்கும். அக்குறைகளைத் தாமே உணர்ந்தோ பிறர் உணர்த்த அறிந்தோ திருத்திக் கொள்ள வேண்டும். மேடைமேல் ஏறினதும் தம்மை மறந்துவிட்டுக் கேட்போரையும் விஷயத்தையும் உள்ளத்திற் கொண்டால், சொற்பொழிவு இயல்பான தாகவும் தெளிவானதாகவும் இருக்கும். பேசும் போது சரிப்படுத்திக் கொள்ள வேண்டிய, தம்மை அலங்கரித்துக் கொள்ள வேண்டிய சிலவற்றை அறிந்து கொண்டிருத்தலும் நல்லதுதான்.

பேசுவோர் தம் குரல் அமைப்பையும், தன்மையையும் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறக்கும் போது ஒரேவித குரலோடேயே பிறந்தோம், அது மாறுது என்ற நம்பிக்கை தவறுனது. பயிற்சியினல் சமயத்துக்குத் தகுந்தவாறு குரலைச் சரிப்படுத்திக் கொள்ளமுடியும் என்பது அறிஞர்களின் அனுபவம். நம் குரலை நாமே கவனித்துக் கேட்டுக்கொள்ளும் பழக்கம் இல்லாமையால்தான் குரலோசையை மாற்றிக்கொள்ளும் முயற்சி நம்முள் பலருக்கு இல்லை. கடும் குரலில் நல்ல விஷயத்தைப்

பேசுவது அழுக்கான பாத்திரத்தில் அரும்பாயசத்தைக் கொடுப்பது போலாகும். குரலைத் தம்வசப் படுத்திக் கொள்ள வேண்டுவது பயிற்சிகளுள் முக்கிய பயிற்சியாகும். இரைந்து பேசுவது குரலோசையின் கட்டுப்பாட்டைத் தளர்த்தி விடுகிறது; பேச்சின் பெருமையும் பாதிக்கப்படுகிறது. சாதாரண முறையில் பூரண குரலில் சொற்களை உச்சரித்தால் கேட்போர் மனத்தில் நன்ருய்ப் பதியும். சொற்களை வாய்விட்டுப் பகருவதுதான் நல்லது. வாய்க்குள் முணுமுணுத்தல் மிக மயக்கத்தை யுண்டாக்கும். முன்னின்று பேசுவதைப்போல் சொற்பொழிவு கேட்போருக்குப் புரிய வேண்டும். நிறுத்தி நிறுத்தி சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு குரலை எடுத்தும் படுத்தும் நிதானமாகப் பேசும் பழக்கம் கூட்டத்தினரைத் தம்மிடம் இழுத்துக் கொள்ளும் சக்தியாக அமைந்துவிடும். எண்ணத்தின் தீவிரத்திற்கேற்ப குரல் எடுத்தும் படுத்தும் வெளிப்படும். இம்முறை கேட்போர் உள்ளத்தில் விஷயத்தை நேராகச் செலுத்தும் உபாயமாகும். பேசி முடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் பரபரப்பாகவும் வேகமாகவும் பேசுவது கேட்போருக்கு மனவேதனையை உண்டாக்குவதோடு, பேசுவோருடைய அச்சத்தையும் வெளிப்படுத்துவதாகும். இத்தகைய பேச்சு கேட்போருக்குத் தலைவலியாகும்; அவர்களுடைய கவனத்தையும் இந்தப் பேச்சு இழுக்காது. நிதானமாகப் பேசுவதனல் சொற்களை நன்ருய் உச்சரிக்கவும் இடை இடையே நிறுத்தவும் வாய்ப்பு இருக்கிறது; கேட்போருக்கும் புரிகிறது. முகத்தைச் சற்று அண்ணாந்த நிலையில் நிறுத்திப் பேசினல், குரலோசை அனைவருக்கும் நன்கு கேட்கும்.

பண்பட்ட பேச்சாளர்கள், கேட்போர் ஒவ்வொருவரையும் கவனிப்பதே போல் தோன்றுவார்கள். சபையை ஒரு கும்பல் என்று கருதாமல் தனித்தனி

யானவர்கள் என்று கருதி, பேசும் போதே அங்கும் இங்கும் ஒவ்வொருவருடைய கண்களையும் தம் கண்களால் தொட்டுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால் கேட்போர்கள் பேச்சாளர் தம்மைக் கவனிக்கிறார் என்று, சுறு சுறுப்பாக இருப்பார்கள். "**நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால், கண் அல்லது இல்லை பிற,**" என்பது குறள். பேச்சாளர் தம்மையே கவனிக்கிறார் என்று நினைக்கும்படி ஒவ்வொருவரையும் உற்று நோக்க வேண்டும். இவ்விதமான கண்ணோட்ட நிலையைப் பேச்சாளர்கள் பெறுவதற்குப் பழகிக் கொள்ளவேண்டும். பேசுவது வாய்மட்டும் அல்ல; கண்களும் பேசுகின்றன. இது பேச்சுக்கலையின் அடிப்படையான தத்துவம்.

பேசும்போது உடல் அசைவுகளும், அங்க ஆட்டங்களும் இயல்பாகவே உண்டாகின்றன. எண்ணத்தின் அவசியம், வேகம் இவைகளை விளக்கவே கைகளும் சில அங்கங்களும் அசைகின்றன. முகம், கண் போன்ற உறுப்புக்களும், பேசுவோர் நிலையும் உணர்ச்சியும் மாறும்போது மாறுகின்றன. இந்தச் சேட்டைகள் அதிகமாக ஒருவரிடம் காணப்பட்டால் குறைத்துக்கொள்ள வேண்டும். பேசும் போது நன்றாய் நின்று பேசினால் உணர்ச்சி, பேச்சு, தோற்றம் ஆகியவை விளக்கமாகவும் பொருத்தமாகவும் இருக்கும். பேச்சாளர்கள் தம் உடை முதலிய வெளி வேஷங்களையும் சிறிது செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். சீர்மை என்பது அனைவரும் விரும்பும் தன்மையது. சீர்குலைவு சபையோருடைய உள்ளத்தைப் பேசும் விஷயத்திலிருந்து அப்புறப்படுத்தும். சீர்குலைவை அனைவரும் கவனிக்க நேரும். பேசுவோர் தம் உடல் உடை முதலியவைகளை அடிக்கடி பிறர் கவனிக்குமாறு இடந்தரலாகாது. அவ்வாறு தருவதால் கேட்போர் மனம் உடலர்திகளைக் கவனிக்கவே விரும்பும். தமக்கு முன் யாராவது பேசு

பவர் இருந்தால் அவர்கள் பேச்சை அமைதியாகக் கவனித்து, அத்தருணத்தில் சபையில் நிலவும் நிலைமையைக் கூர்ந்தறிவது நல்லது. தாம் இனிப் பேசுவதற்கு அநுகூலமான சில குறிப்புகளை இந்தக் கவனிப்பால் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

## 4. அவையஞ்சாமை

சபையோர்க்குத் தன் பணிவையும் அடக்கத்தையும் ஒரு சொற்பொழிவாளன் தெரிவித்துக் கொள்வது தவருகாது. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவனுக்கு அணியல்லவா? அவையடக்கப் பேச்சையும் முன்னுரையையும் சொற்பொழிவை நல்ல முறையில் ஆரம்பிப்பதற்கு உபயோகித்துக் கொள்ள வேண்டும். பேசுகையில் சில தவறுகள் ஏற்படலாம்; அவைகள் நமக்கும் தெரியலாம்; கேட்போர்களும் அக்குறைகளைக் கவனிக்கலாம். இவ்வித சந்தர்ப்பங்களில் சாதுரியமாக விஷயத்தைப் பேசும் போதே குறையைச் சரிப்படுத்திவிட வேண்டும். தவறுகளைக் கவனித்ததாக மீண்டும் பலர் அறியத் திருத்த முயல்வதுதான் சொற்பொழிவின் சுவையைக் கெடுக்கும். திறமைசாலிகள் தம் குறைகளையும் சமய சந்தர்ப்பத்திற் கேற்பப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். "**அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின், தொகையறிந்த தூய்மை யவர்**" என்னும் குறட்பாவின் கருத்தை மனத்துட் கொண்டு நடந்தால் குறையும் நிறைவாகுமல்லவா?

சபை நடுக்கம் அல்லது அச்சம் என்பது அனைவருக்கும் உண்டு. இந்த அச்சம் ஆரம்பத்தில் சற்று அதிகமாகக் காணப்படும். ஆனல் பேசும் பொருளில் நல்ல தெளிவு இருப்பின் பேசத் தொடங்கிய சில நிமிடத்தில், அச்சம் விலகிவிடும். விலகாமல் இருப்பினும் சொற்பொழிவின் மாண்பு கெட்டுவிடாது. இராணுவ வீரர்கள் போரிடுகையில் தம்மீது குண்டு

பாயும் என்று அச்சமுடன் இல்லையா? அதனால் அவர்கள் போரிடுவதை நிறுத்திவிடுகின்றார்கள். ஆகவே, சபை நடுக்கம் என்பது இயல்பாக ஏற்படும் பயம் என்பதைச் சிறந்த பேச்சாளர்கள் நன்கு அறிவார்கள். அச்சம் என்றால் என்ன? என்பது தெரிய வேண்டும். அஞ்சுவது சபைக்கா? சபைக்கு என்றால் அஞ்சவேண்டுவதில்லை. ஏனெனில், சபையோர் நம்மவர்; நாம் பேச அவர்கள் கேட்கும் நிலையில் இருக்கின்றவர்கள். நாம் பேசிய பிறகே அவர்கள் ஏதாவது குறையையோ, நிறையையோ கூறவேண்டியவர்கள். இந்நிலையில் அவர்களுக்குப் பயப்படுவது என்பது தவறான எண்ணமாகும். உண்மையில் சபை நடுக்கத்திற்குக் காரணம் நம்மைப் பற்றிய சந்தேகமேயாகும். பேசுகையில் தவறுமோ, சேஷ்டைகள் மலியுமோ, உடை உடலின் சீர்மை கெடுமோ என்ற சந்தேகங்கள் சபை நடுக்கத்தை உண்டாக்குகின்றன. இவ்வித எண்ணங்களுக்கு இடங்கொடுத்தல் கூடாது. "**வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடென் நுண்ணவை அஞ்சு பவர்க்கு?**" என்ற குறட்பாவைப் போற்றி ஒழுகவேண்டும். குறையற்ற சொல்லின் செல்வர்கள் யாருளர்? எவரும் இலர். "யான் குறையற்ற சொல்லின் செல்வன்" என்று ஒருவன் எண்ணிக் கொள்வதே அவன் சபை நடுக்கம் கொள்வதற்குக் காரணமாகும். அவ்வாறு எண்ணுதிருக்கையில் இந் நடுக்கத்திற்கு இடமேயில்லை. பேசிப் பழகுவதாலும், தன்னம்பிக்கை கொள்வதாலும் நல்ல குரல், தோற்றம் முதலியவற்றாலும் செம்மைப்பாடுடையவன் சபை நடுக்கத்தைப் போக்கிக் கொள்ளுவான்.

சொற்பொழிவை முடிக்கும்பொழுது சொற்பொழிவின் சாரத்தைச் சுருக்கமாகத் திரட்டிச் சொல்லி முடிக்க வேண்டுமென்று முன்பே குறித்தோம். முடிந்ததும் உட்கார்ந்து கொண்டு சபை

12 V 197



C-5-8
N53

யோரின் மகிழ்ச்சியைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும். சொற்பொழிவைக் கேட்டதற்காகச் சபையோர்க்குப் பின்முறை நன்றி கூறுதல் நாகரிகமாகாது. நம் நாட்டில் சிறந்த சொற்பொழிவாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய கட்டுரைகளையும் சொற்பொழிவுகளையும் படித்தும் கேட்டும் பயனடைய வேண்டும்.

ஞான மதத்தைப் போதித்த கௌதம புத்தரும் அன்பு மதத்தைப் போதித்த அடியார்கள், ஆழ்வார்கள், இயேசுநாதர் போன்ற பெரியோர்களும் அடிமைத்தளையை அகற்றிய ஆபரகாம் லிங்கன், அஹிம்சா முறையில் ஆட்சியை மாற்றியமைத்த அண்ணல் காந்தியடிகள் போன்ற அறிஞர்களும் உலகம் போற்றத் திகழ்வதன் காரணம் அவர்கள் பெற்றிருந்த பேச்சுவன்மையே யாகும்.

"பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்."

---

"நான் பேசவிரும்பும் கருத்துக்களை ஆராய்ந்து வரிசையாக, என் மனத்தில் பொருத்தமாகவும் பிறர் குற்றம் காணாதவாறும் தர்க்க முறையாகவும் ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்வது வழக்கம்."

அமெரிக்க நாவலர் உட்ரோவில்சன்.

"இயற்கையாக மனத்தில் பொங்கும் மனோவேகங்களினாலும் எதிரில் கேட்டுக்கொண்டு நிற்கும் மனிதர்களுடைய முகத்தில் காணும் உணர்ச்சி வேகத்தின் பிரதிபலனாகவும், பேச்சில் தோன்றிப் பொலியும் வடிவழகுகளே பேச்சுநடை என்பது. எழுத்தறிவின்மை, அசிரத்தை, கவனக்குறைவு முதலிய காரணங்களினால் உண்டாகும் கொச்சை மொழியும் இலக்கணப் பிழையும் பேச்சுநடை ஆகா."

பேசும் தமிழ்—ராஜாஜி.

படித்தீர்களா ? இல்லையேல் இன்றே படியுங்கள்!

ஓர் அரிய நூல்

# பாராளும் மன்றம்

(அரசாங்கம் அங்கீகாரம் பெற்றது)

ஆங்கிலப் பார்லிமெண்டை உலகப் பார்லிமெண்டு களின் தாய் என்று சொல்லுகிறோம். இதன் வரலாறு, வளர்ச்சி, பிரிவு, செயல் இன்ன பிறவற்றை ஆதிமுதல் இன்றுவரை மிக அழகிய தமிழ் நடையில் எழுதப் பெற்ற நூல். மாணவர்கள் அனைவரும், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் படித்தறிய வேண்டியது. அரசியல் வாதிகள் அனைவர்க்கும் இந்நூல் ஒரு நல்ல துணைவனாகும்.

114 பக்கங்கள் படங்களுடன் விலை ரூ. 0-10-0

---

# நமது ஆட்சி முறை BOOK I & II

## நான்கு ஐந்தாம் வகுப்புகளுக்குரியவை

(அரசாங்க அங்கீகாரம் பெற்றவை)

இந்த நூல்கள் மாணவர்களுடைய மனத்தைப் பற்றும் முறையில் எழுதப் பெற்றுள்ளன, ஆங்காங்கு படங்களும் பாடக்கண்ணுடிகளும் கொண்டுள்ளன. உடல் ஆட்சி, ஊராட்சி, நாட்டாட்சி ஆகியவற்றின் தொடர்புகள் விளங்கும்படி அமைந்துள்ளன, தெரிந்த விஷயங்களை எடுத்துக்காட்டி அவற்றின் மூலம் புதிய விஷயங்கள் விளக்கப்பெற்றுள்ளன,

முதல் புத்தகம் விலை ரூ. 0-7-0
இரண்டாம் புத்தகம் விலை ரூ. 0-8-0

---

# நன்மக்கள் பயிற்சி

(அரசியலார் அனுமதி பெற்றது)

முதல் பாரத்திற்கு உரியது, விளக்கப் படங்களுடன் கூடியது. சிறுவர்களுக்காகவே எழுதப்பெற்றது. படித்த தாம் அதன்படிச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கும் முறையில் எளிய நடையில் அமைந் துள்ளது.

விலை ரூ. 0-6-0

கிடைக்குமிடம் :

*...ரியர் நூற்பதிப்புக் கழகம்*

...வழக்காரத் தெரு, சென்னை-1.

# அனைவரும் படிக்கவேண்டிய நூல்கள்

1. மகாத்மாவின் மாணவர் 0—4—0

2. மெல்லடிக் குருளை அல்லது
இளஞ்சாரணர் (Cubs) படங்களுடன் 0—5—0

3. நினைவும் கனவும்
(அரசியல் அறிவுநூல்) 0—4—0

4. பேச்சுக்கலை 0—4—0

5. தமிழ்ச் சுவடி
(Tamil Desk work) (அச்சில்)

தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக விலையுடன் ஒரு அணா கூட்டி அனுப்ப வேண்டும். தபால் பில்லைகளாகவும் அனுப்பலாம். 12 பிரதிகளுக்குக் குறையாமல் தருவிப்பவர்களுக்கு 20% கழிவு தரப்படும்.

கிடைக்குமிடம் :

**T. வீராசாமி,**

*127, புதுத்தெரு, மண்ணடி,*

சென்னை—1.

ராயன் அச்சகம் சென்னை—1